DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 419 / 2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 3 |
| Name | திரு. மாரிசிவா |
| Father Name | சுப்பையா |
| Village | குமாரபண்ணையூர் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 35 |

**<u>(1,2 எதிரிகள் ஆஜரில்லை: 1,2 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 04-04-2025.(நேரம்: 12.40PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது குமாரபண்ணையூரில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன்.
3. இவ்வழக்கின் எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியும். என்னுடன் வேலை பார்த்தவர்கள்.
4.இவ்வழக்கின் இறந்துபோன முருகேசனையும், அசா 1 ஜுவாவையும் எனக்கு தெரியும் அவர்கள் என்னுடன் வேலை பார்த்தவர்கள்.
5.கடந்த 16.8.2013 ஆம் தேதி மதியம் 03.00 மணியளவில் முருகேசனும், ஜுவாவும் பாய்லரில் வேலைபார்த்துக்கொண்டிருக்கும்போது எல்க்டிரிசியன் விஜயகோபால் மற்றும் ஜெயபிரகாஷ் ஆகியோர்கள் தெரியாமல் பாய்லார் ஆன் , ஆப் செய்யும் பட்டணை பிரஸ் செய்து விட்டார்கள்.
6.முருகேசனும், ஜுவாவும் பாய்லரின் உள்ளே இருந்தவர்களுக்கு அடிப்பட்டு விட்டது. இதனால் இருவரும் சுயநினைவை இழந்து விட்டார்கள்.
7. நானும், எனது நண்பர் பைரனும் சேர்ந்து ஆத்தூரில் உள்ள சங்கர் ஆஸ்பத்திரிக்கு ஐஸ்வர்ய கம்பெனியின் ஓணர் காரில் வைத்து சிகிச்சைக்காக கொண்டு சென்றோம்.

8. அங்கு போன போது மருத்துவர் முருகேசன் இறந்து விட்டார் என்று கூறிவிட்டார்கள்.
9. பின்பு தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தோம்.
10.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 12.46PM)**

**1.**சம்பவம் நடந்தபோது நான் கம்பெனியில் என்ன வேலை பார்த்தேன் என்று கேட்டால் வெல்டர்ராக இருந்தேன்.
2.நான் வேலைபார்த்த கம்பெனி என்ன தயார் செய்தது என்று கேட்டால் பிளாஸ்டர் ஆப் பேரிஸ் தயார் செய்தது.
3.நான் அந்த கம்பெனியில் அந்த சமயத்தில் வேலை பார்த்ததை காண்பிப்பதற்கான அடையாள அட்டை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் அவர்கள் கேட்டார்கள் காண்பித்தேன்.
4.என் கம்பெனியில் வருகைபதிவேடு பராமரிக்கப்படும் வழக்கம் உள்ளதா என்றால் ஆம் உள்ளது.
5.நான் கம்பெனியில் உள்ள வருகை பதிவேட்டில் கையெழுத்து செய்யும் வழக்கம் உள்ளதா என்றால் ஆம் கையெழுத்து செய்வேன்.

6.வெல்டர் வேலை நான் செய்வதற்கு எனக்கு பிரத்தியேகமான படிப்பு படித்துள்ளேனா என்றால் இல்லை. அனுபவம் மட்டுமே உள்ளது.

7.பாய்லர் நாங்கள் இருக்கும் ரூமிற்கு பக்கத்தில் தான் உள்ளது என்றால் சரிதான்.

8.எதிரிகள் இருவரும்தான் சம்பவ நேரத்தின்போது சம்பவ இடத்தில் பாய்லரை ஆன் , ஆப் செய்யும் சுவிட்சை இயக்கினார்கள் என்று நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் ஆம் பார்க்கவில்லை.

9.இறந்து போன நபர்கள் எவ்வளவு நாள்கள் வேலை பார்த்தார்கள் என்று தெரியுமா என்று கேட்டால் சுமார் 8 மாத காலமாக வேலை பார்த்தார்.நான் அந்த கம்பெனியில் எவ்வளவு நாள் வேலை பார்த்தேன் என்று கேட்டால் 7,8 மாதம் தான் வேலை பார்த்தேன்.

10. பாய்லரில் அடிப்பட்டு கிடந்த இருவரையும் மருத்துவமனைக்கு நான் தான் அழைத்து சென்றேன் என்று சொன்னால் சரிதான்.

11.நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் செயலால் அசம்பாவிதம் ஏற்பட்டது என்பதை நான் நேரடியாக பார்க்காததால் கம்பெனியில் உள்ள உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12.இந்த வழக்கிற்கும் இரண்டாம் எதிரிக்கும் எந்த வித சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(2 ஆம் எதிரி தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் . மேற்கண்ட 2 ஆம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 1 ஆம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது)

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.